**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வேடசந்தூர்**

**முன்னிலை : திரு.B.பீட்டர், M.A., B.L.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**வேடசந்தூர்.**

**திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் ஆடி மாதம் 25-ம் நாள்**

**2026-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ம் நாள் திங்கட்கிழமை**

**அசல் வழக்கு எண்.53/2025**

**(CNR.No.TNDG160000652025)**

1. தவமணி

2.பாலாஜி வீரமணிகண்டன்

3.ராஜசுதாகர் .....வாதிகள்

**//எதிர்//**

1. தங்கம்

2. தமிழ்நாடு அரசுக்காக

மாவட்ட ஆட்சியர் அவர்கள்,

திண்டுக்கல் மாவட்டம்,

திண்டுக்கல்.

3 .தமிழ்நாடு அரசுக்காக,

வட்டாட்சியர்,

வேடசந்தூர் தாலுகா,

திண்டுக்கல் மாவட்டம்.

....பிரதிவாதிகள்

இந்த வழக்கானது 04.06.2025-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பாக 14.07.2026-ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.P.கண்ணன்** அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திருமதி.K.சுபாஷினி** அவர்கள் ஆஜராகியும், 2,3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் **திரு.P.கனகராஜ்** அவர்கள் முன்னிலையாகியும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தினால் 03.11.2025 ம் தேதி ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வாதி மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

இவ்வழக்கானது கடந்த 15.11.2011 ம் தேதி இறந்துபோன ரெங்கராஜ் என்பவருக்கு இந்து வாரிசுரிமை சட்டப்படி இந்த வாதிகள் தான் சட்டப்படியான

வாரிசுகள் என விளம்புகை பரிகாரம் வழங்ககோரியும், 15.11.2011 ம் தேதி இறந்துபோன ரெங்கராஜ் என்பவருக்கு வாதிகள் மட்டுமே வாரிசுதாரர்கள் என 3 ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்ககோரியும், வாதிக்கு ஆகும் செலவு தொகையை பிரதிவாதிகள் செலுத்தக்கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும், சி.பி.சி ஆர்டர் 7 ரூல் 1-ன்படி வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:-**

இறந்துபோன ரெங்கராஜ் என்பவருக்கு 1ம் வாதி இரண்டாம் மனைவி ஆவார். 2, 3 வாதிகள் மகன்கள் ஆவார்கள். இறந்துபோன ரெங்கராஜ் என்பவருக்கும், 1ம் பிரதிவாதியான தங்கம் என்பவருக்கும் கடந்த 1985 ம் ஆண்டு வாக்கில் உறவினர்கள், பெரியவர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது. அதன்பின்னர் 1ம் பிரதிவாதிக்கும், இறந்துபோன ரெங்கராஜ் அவர்களுக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட்ட காரணத்தினால் இருவரும் ஊரில் உள்ள பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் வைத்து பைசல் பேசி இருவரும் மனமுவந்து தனித்தனியாக பிரிந்து வேறொரு திருமணம் செய்து கொள்வதாக ஒப்புக்கொண்டு இருவரும் 1988 ம் வருடம் மார்ச் மாத வாக்கில் ஊர் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் விவாகரத்து செய்துகொண்டனர். அவர்களுக்கு குழந்தைகள் எதுவும் பிறக்கவில்லை. 1ம் வாதியான தவமணி என்பவரும் அதே ஆண்டான

1988ம் வருடம் ஆனி மாத வாக்கில் திருமணம் செய்துகொண்டனர். லை இறந்துபோன ரெங்கராஜ்-தவமணி தம்பதியினருக்கு இந்த 2, 3 வாதிகள் மக்கள்களாக பிறந்துள்ளனர். லை ரெங்கராஜ் என்வர் இந்த வாதிகளுடன் குடும்பம் நடத்தி வந்து கடந்த 15.11.2011ம் தேதி உடல்நல் குறைவால் இறந்துவிட்டார். இறந்துபோன ரெங்கராஜ் என்பவரின் தந்தை, தாய் இருவரும் மேற்படி ரெங்கராஜ் இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டதால் அவருக்கு அவரது இரண்டாம் மனைவியான 1ம் வாதி மூலம் பிறந்த 2,3 வாதிகள் ஆகியோர்கள் மட்டுமே சட்டப்படியான வாரிசு ஆவார். எனவே இறந்துபோன ரெங்கராஜ் என்பவருக்கு இந்த வாதிகள் மட்டும் சட்டப்டியான வாரிசுகள் என்று வாரிசு சான்று வழங்ககோரி வாதிகள் 3ம் பிரதிவாதியிடம் கடநத் 02.09.2024ம் தேதி Online மூலம் மனு கொடுத்துள்ளார்கள். அந்த மனுவின் விசாரணையில் 3ம் பிரதிவாதி As per deceased person wife thavamani statement her husband married women first. She leave and got another marriage in Nagayakottai, She is second wife. Not recommended என Application Reject செய்து 3ம் வாதிக்கு Message மூலம் தகவல் அனுப்பியுள்ளனர். அதன்பின்னர் வாதிகள் நேரடியாக 3ம் பிரதிவாதியினை சந்தித்து விபரம் கேட்டதில் வாரிசு சான்று பெறுவது தொடர்பாக நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு வாதிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. லை ரெங்கராஜ் அவர்களின் பெயரில் சில சொத்துக்கள் உள்ளன. அவற்றை பொறுத்து வருவாய்துறையில் பெயர் மாற்றட் செய்யவும் இதர விசயங்களுக்காகவும்

இறந்துபோன ரெங்கராஜ் என்பவருக்கு வாதிகள் தான் வாரிசுகள் என வாரிசு சான்று தேவைப்படுகிறது. 3ம் பிரதிவாதிக்கு 2ம் பிரதிவாதி இந்த மாவட்டத்தின் Administrative Head ஆவார். எனவே, இவ்வழக்கில் 2ம் பிரதிவாதி தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். இறந்துபோன ரெங்கராஜ் சொத்துக்களுக்கு அவசரமாக பெயர் மாற்றம் செய்ய வாதிகளுக்கு அவசர நிமித்தம் காரணமாக வாரிசு சான்றிதழ் தேவைப்படுவதால் அறிவிப்பு அனுப்பவில்லை. எனவே 15.11.2011ம் தேதி இறந்துபோன ரெங்கராஜ் என்பவருக்கு வாதிகள் மட்டுமே சட்டப்படியான வாரிசுகள் என விளம்புகை பரிகாரமும் மற்றும் செயலுத்துக்கட்டளை பரிகாரமும் வழங்ககோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:-**

தாவா பிராதில் 1ம் பிரதிவாதியால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர ஏனைய சங்கதிகள் அனைத்தும் உண்மையல்ல. தாவா பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள கொடிவழி ஜாபிதா உண்மை. தாவா பிராதில் இறந்துபோன ரெங்கராஜ் என்பவருக்கு 1ம் வாதி இரண்டாம் மனைவி ஆவார் என்பது உண்மை. 2,3 வாதிகள் மகன்கள் ஆவார்கள் என்பது உண்மை. இறந்துபோன ரெங்கராஜ் என்பவருக்கும், 1ம் பிரதிவாதியான தங்கம் என்பவருக்கும் கடந்த 1985ம் ஆண்டு வாக்கில் உறவினர்கள், பெரியவர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றது உண்மை. அதன்பின் 1ம் பிரதிவாதிக்கும், இறந்துபோன ரெங்கராஜ அவர்களுக்கும்

இடையே மனக்கசப்பு ஏற்பட்ட காரணத்தினால் இருவரும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பைசல் பேசி இருவரும் பிரிவதாக ஒப்புக்கொண்டு 1988 ம் வருடம் மார்ச் மாத வாக்கில் விவாகரத்து செய்துகொண்டனர் என்பது உண்மை. 1ம் பிரதிவாதிக்கும் இறந்துபோன ரெங்கராஜ் அவர்களுக்கும் குழந்தைகள் எதுவும் பிறக்கவில்லை. அதன்பின்னர் இறந்துபோன ரெங்கராஜ் என்பவரும், இந்த 1ம் வாதியான தவமணி என்பவரும் அதே ஆண்டான 1988 ம் வருடம் ஆனி மாத வாக்கில் திருமணம் செய்துகொண்டனர். ஷை இறந்துபோன ரெங்கராஜ் தவமணி தம்பதியினருக்கு இந்த 2,3 வாதிகள் மக்கள்களான பிறந்துள்ளனர். ஷை ரெங்கராஜ் என்பவர் இந்த வாதிகளுடன் குடும்படம் நடத்தி வந்து கடந்த 15.11.2011 ம் தேதியன்று உடல்நலம் குறைவால் இறந்துவிட்டார் என்பது உண்மை. ஷை இந்த 1ம் பிரதிவாதிக்கும், இறந்துபோன ரெங்கராஜ் என்பவருக்கும் இடையே விவாகரத்து ஏற்பட்ட பின்னர் இந்த 1ம் பிரதிவாதி காளிமுத்து என்பவரை வேறொரு திருமணம் செய்து ஷை காளிமுத்து என்பவருடன் குழந்தைகள் பெற்று வாழ்ந்து வருகிறார். ஷை இறந்துபோன ரெங்கராஜ் அவர்களுக்கு இந்த 1ம் பிரதிவாதி எக்காலத்திலும் வாரிசு என உரிமை கோரமாட்டார் என உறுதியளிக்கிறார். ஷையாரிடமிருந்து இந்த 1ம் பிரதிவாதிக்கு எந்தவித சொத்துக்களோ, உரிமையோ, பந்தக பாராதீனங்களோ இல்லை என உறுதியளிக்கிறார். எனவே இறந்துபோன ரெங்கராஜ் அவர்களுக்கு இந்த வாதிகள் மட்டுமே வாரிசுகள் என தீர்ப்பளிப்பதில் இந்த 1ம் பிரதிவாதிக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை.

**3. வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை, வழக்காவணங்கள் ஆகியவற்றை நன்கு பரிசீலனை செய்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டன:**

1. வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?
2. வாதிகள் கோரியுள்ள செயலுறுத்து கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?
3. வாதிகளுக்கு கிடைக்க வேண்டிய இதர பரிகாரங்கள் என்ன?.

4. வாதிகள் தரப்பில், 1ம் வாதி தவமணி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்களும், வா.சா.2 ஆக சக்திவேல் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.9 குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதி தங்கம் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5. இருதரப்பும் கேட்கப்பட்டன. வழக்கின் சாட்சிய சான்றாவணங்கள் அனைத்தும் நன்கு பரிசீலனை செய்யப்பட்டன.

6. **<u>தீர்வு எழுவினாக்கள் 1 மற்றும் 2</u>**:

தாவா வழக்கானது கடந்த 15.11.2011ம் தேதி இறந்துபோன ரெங்கராஜ் என்பவருக்கு இந்து வாரிசுரிமை சட்டப்படி இந்த வாதிகள் தான் சட்டப்படியான வாரிசுகள் என விளம்புகை பரிகாரம் வழங்க கோரியும், அதன் அடிப்படையில்

இறந்துபோன ரெங்கராஜ் என்பவருக்கு இந்த வாதிகள் வாரிசு என வாரிசு சான்றிதழ் வழங்கும்படி 3ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்ககோரியும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. வாதிகள் வழக்குரையிலும், வா.சா.1ன் நிரூபணவாக்குமூலத்திலும் 1ம் வாதியின் கணவரும் 2,3 வாதிகளின் தந்தையுமான இறந்துபோன ரெங்கராஜுக்கும் அவரது முதல் மனைவியான 1ம் பிரதிவாதிக்கும் கடந்த 1985ம் ஆண்டு வாக்கில் திருமணம் நடைபெற்றது என்றும், அவர்களுக்கிடையே மனக்கசப்பு ஏற்பட்டு ஊர் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பைசல் பேசி இருவரும் மனமுவந்து தனித்தனியாக பிரிந்து வேறொரு திருமணம் செய்துகொள்வதாக ஒப்புக்கொண்டு 1988ம் வருடம் மார்ச் மாதம் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் விவாகரத்து செய்துகொண்டனர் என்றும், விவாகரத்து செய்த சூழலில் இருவருக்கும் குழந்தைகள் ஏதும் இல்லை என்றும், அதன்பின்னர் ரெங்கராஜ்க்கும் 1ம் வாதிக்கும் 1988ம் வருடம் ஆனிமாதம் வாக்கில் திருமணம் நடைபெற்று 2,3 வாதிகள் பிறந்தனர் என்றும், இந்நிலையில் ரெங்கராஜ் கடந்த 15.11.2011ம் தேதி உடல்நலக்குறைவால் இறந்துவிட்டனர் என்றும், ரெங்கராஜ் இறக்கும்போது அவருக்கு வயது 48 என்றும், அவருக்கு முன்பே ரெங்கராஜின் தாய், தந்தையர் இறந்துவிட்டனர் என்றும், எனவே இறந்துபோன ரெங்கராஜ்க்கு வாதிகள் மட்டுமே வாரிசுகள் என்றும், இது சம்மந்தமாக 3ம் பிரதிவாதியிடம் 02.09.2024ம் தேதி

Online மூலம் மனுசெய்தபோது மேற்கண்ட மனுவை நிராகரித்துவிட்டதாக 3ம் வாதிக்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டது என்றும், அதன்பின்னர் 3ம் வாதியின் அலுவலகத்திற்கு சென்றுகேட்டபோது நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள கூறிவிட்டனர் என்றும், இறந்துபோன ரெங்கராஜ் பெயரில் சில சொத்துக்கள் உள்ளனர் என்பதால் வருவாய்துறையில் பெயர் மாற்றம் செய்துகொள்ள வாரிசு சான்று தேவைப்படுகிறது என்றும், எனவே வாதிகள் கோரியுள்ளபடி விளம்புகை பரிகாரமும், செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி வழக்கை அனுமதிக்க வேண்டும் என்று வாதிகள் கூறியுள்ளனர்.

8. 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 1ம் பிரதிவாதிக்கும், இறந்துபோன ரெங்கராஜ்க்கும் 1988ம் வருடம் திருமணம் நடந்து அவர்களுக்குள் ஏற்பட்ட மனக்கசப்பால் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பேசி விவாகரத்து பெற்றுக்கொண்டனர் என்றும், அப்போது அவர்களுக்கு குழந்தைகள் இல்லை என்றும், அதன்பின்னர் அதே வருடம் ஆனி மாதத்தில் இறந்துபோன ரெங்கராஜ் 1ம் வாதியை திருமணம் செய்துகொண்டார் என்றும், அவர்களுக்கு 2,3 வாதிகள் பிறந்தனர் என்றும், ரெங்கராஜ் கடந்த 15.11.2011ம் தேதி உடல்நலக்குறைவால் இறந்துவிட்டார் என்றும், 1ம் பிரதிவாதி இறந்துபோன ரெங்கராஜை பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் விவாகரத்து செய்தபின்னர் காளிமுத்து என்பவரை திருமணம் செய்து குழந்தைகள் பெற்று வாழ்ந்து வருகின்றார் என்றும்,

இறந்துபோன ரெங்கராஜ்க்கு 1ம் பிரதிவாதி வாரிசு என்று எக்காலத்திலும் உரிமைகோர மாட்டார் என்றும், 1ம் பிரதிவாதிக்கு இறந்துபோன ரெங்கராஜிடமிருந்து எந்தவித சொத்துகளோ, உரிமையோ, பந்தகபாராதீனகளோ இல்லை என்றும், வாதிகள் மட்டுமே இறந்துபோன ரெங்கராஜீற்கு வாரிசுகள் என்றும் கூறியுள்ளார்.

9. 2,3 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் அவர்களுக்கு எதிராக 03.11.2025 ம் தேதி ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

10. வா.சா.ஆ.1 இறந்துபோன ரெங்கராஜ்க்கும் வாதிகளுக்கும் உள்ள உறவு முறையை குறிக்கக்கூடிய உறவுமுறை பட்டியலாகும். வா.சா.ஆ.2 ரெங்கராஜ் அவர்களின் இறப்பு சான்றாகும். வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.5 வாதிகளின் ஆதார் அட்டையாகும். வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 ஆவணமானது 3ம் வாதியின் முறையே பிறப்புசான்று மற்றும் பள்ளிமாற்றுச்சான்று. வா.சாஆ.8 ஆவணமானது 3ம் பிரதிவாதி வாதிகளின் மனுவை தள்ளுபடி செய்ததற்கான Online குறிப்பாணையாகும். வா.சா.ஆ.9 வா.சா.ஆ.2 ன் ஆதார் அடையாள அட்டையாகும்.

11. இறந்துபோன ரெங்கராஜீக்கும் 1ம் பிரதிவாதிக்கும் 1988ம் வருடம் மார்ச் மாதத்தில் திருமணம் நடந்தது என்பதும், திருமணத்திற்கு பின்னர் அவர்களுக்குள்

மனக்கசப்பு ஏற்பட்டு பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் முன்வந்து பேசி விவாகரத்து பெற்றுக்கொண்டனர் என்பதும் இருதரப்பினரும் ஒப்புக்கொள்ளக்கூடிய சங்கதிகளாகும்.

12. இருதரப்பினர்களின் வழக்குரைகளின்படி இறந்துபோன ரெங்கராஜீக்கும் 1ம் பிரதிவாதிக்கும் 1988 ம் ஆண்டு திருமணம் நடந்தது என்பது ஒப்புக்கொள்ளப்படும் சூழலில் சட்டப்படியாக விவாகரத்து பெறாத நிலையில் இறந்துபோன ரெங்கராஜ்ம் 1ம் பிரதிவாதியும் செய்துகொண்ட 2 வது திருமணம் எப்படி நடைமுறையில் உள்ள சட்டப்படி செல்லத்தகுந்தது என்ற கேள்வி எழுகின்றது. முதல் திருமணம் சட்டப்படியாக உரிய அதிகார வரம்புடைய நீதிமன்றத்தால் மணமுறிவு உத்தரவு பிறப்பிக்கப்படாத நிலையில் 2 வது திருமணம் செல்லத்தகுந்தது அல்ல என்பது சட்டநிலையாகும். இந்நிலையில் வா.சா.1 மற்றும் வா.சா.2, பி.வா.சா.1 ஆகியோர் 1ம் பிரதிவாதி காளிமுத்து என்பவரை திருமணம் செய்துகொண்டு குழந்தைகள் பெற்று வாழ்ந்து வருவதாக கூறியுள்ளதின் அடிப்படையில் 2 வது திருமணத்தை சட்டப்படியானது என்று எப்படி ஏற்றுக்கொண்டு வாதிகள் மட்டுமே இறந்துபோன ரெங்கராஜீக்கு சட்டப்படியான வாரிசுகள் என்று கோர முடியும் என்ற கேள்வி எழுகின்றது. எனவே, முதல் திருமணம் சட்டப்படியாக ரத்து செய்யப்படாத நிலையில் இறந்துபோன ரெங்கராஜ்க்கும் 1ம் பிரதிவாதிக்கும் நடந்த திருமணம் சட்டப்படியாக இன்னும் அமலில் உள்ளதாகவே கருத முடியும் என்று

இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் வாதிகள் மட்டுமே இறந்துபோன ரெங்கராஜ்க்கு சட்டப்படியான வாரிசுகள் என்று தீர்மானிப்பதற்கு போதுமான ஆவணங்கள் மற்றும் வாய்மொழி சாட்சியங்களை முன்னிறுத்தி நிரூபிக்கவில்லை என்பதால் வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

13. **<u>எழுவினா 3:-</u>**

வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரங்கள் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா 1 மற்றும் 2 க்கு இந்நீதிமன்றம் விடைகண்டுள்ளதால், இதர பரிகாரங்களும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினா 3 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**இறுதியாக, இவ்வழக்கு தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

இந்த தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 10-ம் நாள் திறந்த

நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

B.Peter Digitally signed by B.Peter

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**வேடசந்தூர்.**

**1. வாதிகள் தரப்பு சாட்சிகள் :-**

1. வா.சா.1 - தவமணி

2. வா.சா.2 - சக்திவேல்

**2. வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:-**

| **வ.எண்.** | **தேதி** | **ஆவண விபரம்** | **குறிப்பு** |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 01.06.2025 | கொடிவழி ஜாபிதா | அசல் |
| வா.சா.ஆ.2 | 15.11.2011 | ரெங்கராஜ் அவர்களின் இறப்பு சான்று | நகல் |
| வா.சா.ஆ.3 | ----- | 1 ம் வாதி ஆதார் அட்டை | நகல் (அசலுடன் ஒப்பீ செய்யப்பட்டது) |
| வா.சா.ஆ.4 | ----- | 2 ம் வாதி ஆதார் அட்டை | நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| வா.சா.ஆ.5 | ----- | 3 ம் வாதி ஆதார் அட்டை | நகல் (அசலுடன் ஒப்பீடு |

| வ.எண். | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| | | | செய்யப்பட்டது) |
| வா.சா.ஆ.6 | ----- | 3 ம் வாதியின் பிறப்பு சான்றிதழ் | நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| வா.சா.ஆ.7 | ----- | 3 ம் வாதியின் மாற்றுச்சான்றிதழ் | நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |
| வா.சா.ஆ.8 | ----- | 3 ம் பிரதிவாதி, வாதிகளின் ஆன்லைன் மனுவை தள்ளுபடி செய்ததற்கான குறிப்பாணை | Online Status |
| வா.சா.ஆ.9 | ----- | வா.சா.2 ன் ஆதார் அட்டை | நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |

**3. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் :-**

1. பி.வா.சா.1 - தங்கம்

**4. பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :-**

| வ.எண். | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | ----- | 1 ம் பிரதிவாதியின் ஆதார் அட்டை | நகல் (அசலுடன் ஒப்பீடு |

| வ.எண். | தேதி | ஆவண விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| | | | செய்யப்பட்டது) |
| பி.வா.சா.ஆ.2 | ----- | 1ம் பிரதிவாதியின் குடும்ப அட்டை | நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) |

B.Peter Digitally signed by B.Peter

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**வேடசந்தூர்.**